### இலங்கை கடற்படை சுட்டதில் இறந்தாரா?

# புதுகை மீனவர் உடல் தோண்டி எடுத்து மறு பிரேத பரிசோதனை





▶ மதுரை ஐகோர்ட்டு உத்தரவின்படி ராஜ்கிரண் உடல் மறுபிரேத பரிசோதனை செய்வதற்காக கோட்டைப்பட்டினம் அருகே உள்ள பொன்னன்வயல் மயானத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது. அடுத்த படம்: மறுபிரேத பரிசோதனை செய்வதற்காக கோட்டைப் பட்டினத்தில் இருந்து அமரர் ஊர்தி மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கடைசி படம்: மீனவர் உடல் தோண்டி எடுக்கப்பட்ட இடத்தில் அவரது மனைவி பிருந்தா உள்ளிட்டோர் இருந்தனர்.

## ஐகோர்ட் கிளை உத்தரவின்படி நடந்தது



▶ ராஜ்கிரண்

**அறந்தாங்கி, நவ.19:** மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவின்படி, இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மோதியதில் கடலில் மூழ்கி உயிரிழந்த புதுக்கோட்டை மீனவரின் உடல் நேற்று தோண்டி எடுக்கப்பட்டு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மறுபிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மீன்பிடி இறங்கு தலத்தில் இருந்து கடந்த அக்டோபர் மாதம் 18ம் தேதி சுரேஷ் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ராஜ்கிரண் (30), சுகந்தன் (23), சேவியர் (32) ஆகிய 3 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அப்போது அவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் ரோந்து கப்பல் மோதிய வேகத்தில் விசைப்படகு கடலில் கவிழ்ந்தது. இதில் ராஜ்கிரண் கடலில் மூழ்கி உயிரிழந்தார். சுகந்தன் மற்றும் சேவியரை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து இலங்கை கொண்டு சென்றனர். இதில் கடலில் மூழ்கிய ராஜ்கிரண் உடலை இலங்கை கடற்படையினர் மீட்டு இலங்கை கொண்டு சென்றனர். பின்னர் அங்கு பிரேத பரிசோதனை செய்து இந்திய அரசிடம் ஒப்படைத்தனர். இந்திய கடற்படை அதிகாரிகள், கடந்த மாதம் 23ம்தேதி ராஜ்கிரண் உடலை தமிழக மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் நடுக்கடலில் ஒப்படைத்தனர். இதைத்தொடர்ந்து கோட்டைப்பட்டினம் அருகே உள்ள பொன்னன்வயல் மயானத்தில் ராஜ்கிரண் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த 12ம்தேதி தேதி ராஜ்கிரண் மனைவி பிருந்தா, மதுரை ஐகோர்ட் கிளையில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், அக்.19ம் தேதி நடுக்கடலில் எனது கணவர் ராஜ்கிரண் மற்றும் சுகந்தன், சேவியர் ஆகியோர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் ரோந்து கப்பலால் படகை இடித்து தள்ளியுள்ளனர். இதில் இந்திய மீனவர்களின் படகு பழுதாகி நடுக்கடலில் மூழ்கியது. படகில் இருந்த சுகந்தன், சேவியர் ஆகியோரை இலங்கை கடற்படையினர் மீட்டனர். 2 நாட்களுக்கு பின்னர் எனது கணவர் ராஜ்கிரண் சடலமாக மீட்கப்பட்டார். எனது கணவரின் உடலை யாரிடமும் காட்டாமல் அடக்கம் செய்தனர். இலங்கை கடற்படையால் அவர் சுட்டு கொல்லப்பட்டிருக்கலாம். போட்டோவில் அவர் முகம் மற்றும் உடலில் காயங்கள் இருந்தன. இந்த சம்பவம் குறித்து தமிழக போலீசார் வழக்கு பதிவு செய்யவும், ராஜ்கிரண் உடலை தடயவியல் நிபுணர்களை கொண்டு மறுபிரேத பரிசோதனை செய்யவும். அவர் எப்படி இறந்தார் என்பதை கண்டறிய உத்தரவிட வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

இந்த வழக்கை கடந்த 16ம்தேதி விசாரித்த நீதிபதி சுவாமிநாதன், கோட்டைப்பட்டினம் மீனவர் ராஜ்கிரண் உடலை வரும் 18ம்தேதி (நேற்று) தாசில்தார் முன்னிலையில் தோண்டி எடுத்து அரசு மருத்துவர்கள் மறுபிரேத பரிசோதனை செய்ய வேண்டும். மனுதாரர் தரப்பில் ஓய்வு பெற்ற தடயவியல் அதிகாரி சேவியர் செல்வசுரேஷ் உடன் இருக்கலாம். சுடப்பட்டு இறந்தாரா அல்லது கடலில் மூழ்கி இறந்தாரா என்பதை தெளிவு படுத்தும் வகையில் மறுபரிசோதனை இருக்க வேண்டும். இதன் அறிக்கையை வரும் 24ம் தேதி அன்று சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

இந்நிலையில் ஐகோர்ட்டு கிளையின் உத்தரவின்பேரில், மணமேல்குடி தாசில்தார் ராஜா, கோட்டைப்பட்டினம் போலீஸ் டிஎஸ்பி மனோகரன், பட்டுக்கோட்டை கடலோர பாதுகாப்பு குழும டிஎஸ்பி பால சுப்பிரமணியன், புதுக்கோட்டை மீன்வளத்துறை உதவி இயக்குனர் சின்னக்குப்பன், ராஜ்கிரண் மனைவி பிருந்தா, இவரது வழக்கறிஞர்கள் நாகேந்திரன், பாண்டியராஜன் உள்ளிட்டோர் முன்னிலையில் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த ராஜ்கிரண் உடல் நேற்று காலை பொக்லைன் மூலம் தோண்டி எடுக்கப்பட்டது. அப்போது பிருந்தாவின் தாய்மாமன் பழனிவேல் என்பவர், ராஜ்கிரண் கையில் குத்தியிருந்த பச்சையை வைத்து அடையாளம் காட்டினார்.

இதைத்தொடர்ந்து அதிகாரிகள், ராஜ்கிரண் உடலை பேக்கிங் செய்து, அமரர் ஊர்தி மூலம் பிரேத பரிசோதனைக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நேற்று மதியம் 2.45 மணியளவில் மருத்துவர்கள் தமிழ்மணி, சரவணன், ஓய்வு பெற்ற தடயவியல் அதிகாரி சேவியர் செல்வசுரேஷ் ஆகியோர் அடங்கிய குழுவினர் ராஜ்கிரண் உடலை மறுபிரேத பரிசோதனை செய்தனர். இந்த பரிசோதனை முழுமையாக வீடியோ பதிவு செய்யப்பட்டது. பின்னர் ராஜ்கிரண் உடல், அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மீண்டும் கோட்டைப்பட்டினம் கொடிக்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

### 24ம்தேதி ஐகோர்ட்டில் அறிக்கை சமர்ப்பிப்பு

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், மதுரை ஐகோர்ட்டு கிளை உத்தரவின்பேரில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மீனவர் ராஜ்கிரண் உடல் மறுபிரேத பரிசோதனை செய்யப்பட்ட அறிக்கை வரும் 24ம்தேதி (புதன்) அன்று மதுரை ஐகோர்ட் கிளையில் சமர்ப்பிக்கப்படும். இலங்கை கடற்படை ரோந்து கப்பல் மோதியதில் மீனவர் ராஜ்கிரண் கடலில் விழுந்து தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தாரா அல்லது இலங்கை கடற்படையினர் ராஜ்கிரணை சித்திரவதை செய்து துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனரா என தெரியவரும் என்றனர்.